**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 126/2024**
**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. விக்னேஷ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பெரியசாமி** | **Calling** | : | |
| **Village** | : | **பெரியபள்ளபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **23** |
| | | | **Dated** | : | **22.05.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**A1 to A3 present. Both side counsels present.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 9), திரு. **விக்னேஷ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து செண்டிரிங் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். அவை முறையே Ex. P4 and Ex. P5. 2011 ம் வருடம் ஒரு நாள் மதியம் சுமார் 01.30 மணி அளவில் போலீசார் அழைத்தன் பேரில் நான் திண்டுக்கல், தாலுகா காவல் நிலையம் சென்றேன். இந்த மாதிரி வெட்டி விட்டார் என்று சென்னார்கள். அதற்காக கையெழுத்துப் போட்டேன். என் முன்னால் பொருள் எதுவும் எடுக்கவில்லை. என் முன்னால் யாரையும் விசாரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள், அவர்களிடம் நான் ஒன்றும் சொல்லவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

போலீசார் விசாரணையில் கடந்த 18.08.2021ம் தேதி மதியம் 18.00 மணிக்கு, திண்டுக்கல் - வத்தலக்குண்டு ரோடு குட்டியபட்டி பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் எதிரி நாய்வெட்டு என்ற மாரிமுத்து என்பவரை விசாரித்தபோது, அவர் எவ்வித வற்புறுத்துதலும் இல்லாமல் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், சாட்சி சுபாஷ் சந்திரபோஸ் என்பவர் முன்னிலையிலும் பதிவுசெய்தார். அதன் அடிப்படையில் அன்றைய தினமே 19.15 மணிக்கு எங்கள் முன்னிலையில் அவர் வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய இரத்த கறை பட்ட அருவாளை எடுத்து ஆஜர் செய்ய அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், அதற்காக சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, உண்மையை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2025.05.22 19:00:59 +0530